# ST JOHN OF THE CROSS
## December 14



# *புனித சிலுவை அருளப்பர் (1542 – 1591)*

இவர் ஸ்பெயின் நாட்டில் உள்ள போத்திபரோஸ் என்னுமிடத்தில் 1542-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய பெற்றோர் ஏழைகள். எனவே இவருக்கு எந்தத் தொழிலையும் கற்பிக்க அவர்களால் முடியவில்லை. இவர் ஒரு மருத்துவமனையில் சேர்ந்து நோயாளிகளுக்கு சேவை செய்து வந்தார். 1563-ஆம் ஆண்டில் கார்மேல் சபையில் தம்மை துணைச் சகோதரராக சேர்த்துக் கொள்ளும்படி இவர் கோரினார். அவர்களோ இவரது அபூர்வ திறமையைக் கண்டு 1567-ஆம் ஆண்டு இவருக்கு குருப்பட்டம் கொடுத்தார்கள். இவர் கடும் தவவாழ்வை விரும்பி கர்த்தூரியன் சபையில் சேர விரும்பினார். அந்த சமயத்தில் இவர் புனித அவிலா தெரேசம்மாளைச் சந்தித்தார். அவள் இவருக்கு ஒரு நல்ல ஆலோசனை கொடுத்தாள். கார்மேல் சபையில் இருந்து கொண்டு அதே சபையைச் சீர்திருத்தும்படி அவரை மன்றாடினாள். கார்மேல் சபையைச் சீர்திருத்தும் வேலையைத் தெரேசாள் தொடங்கியிருந்தாள். இதில் தனக்கு உதவியாய் இருக்கும்படி இவரைக் கேட்டுக் கொண்டாள். இவரும் சம்மதித்தார். இந்த வேளையில் இவருக்கு ஏராளமான துன்பங்களும், வேதனைகளும் வந்தன. அவை அனைத்தையும் இவர் பொறுமையாக சகித்தார். சிருஷ்டிகளிடமிருந்து பற்றை அகற்ற இந்தத் துன்ப வேதனைகள் அவருக்கு உதவியாய் இருந்தது. ஆண்டவர் பட்ட பாடுகள் மீது இவர் அதிக பக்தி கொண்டு தாழ்மைகளைத் தேடிச் செல்வார். ஒரு நாள் நம் ஆண்டவர் இவர் முன் தோன்றி “எனக்காக மிக உழைத்திருக்கிறாய். உனக்கு என்ன சன்மானம் வேண்டும்?” என்றார். அருளப்பர் அவரைப் பார்த்து ஆண்டவரே, “உமக்காக நான் வேதனைப்பட்டு நிந்திக்கப்படும் வரம் தாரும்” என்றார். இவருக்கு ஒரு பொல்லாத நோய் வந்தது. சிகிச்சையும், இளைப்பாற்றியும் பெற இரு மடங்களில் ஏதாவது ஒன்றுக்குப் போகலாம் என்று இவரிடம் சொன்னார்கள். ஒரு மடம் சுகமான இடமாக இருந்தது. அந்த மடத்தின் தலைவர் இவருடைய உற்ற நண்பர். அடுத்த மடம் ஏழை மடமாய் இருந்தது. அந்த மடத்தின் தலைவருக்கு இவர் என்றால் பிடிக்காது. என்றாலும் இயேசுவுக்காக வேதனைப்பட்டு நிந்திக்கப்பட விரும்பிய இவர் பிந்திய மடத்தைத் தெரிந்து கொண்டார். இங்கு இவர் அதிக வேதனைப்பட வேண்டியிருந்தது. திருச்சிலுவையைப் பிடித்துக் கொண்டு 1591-ல் அமைதியாய் உயிர் துறந்தார்.

**சிந்தனை:**

“ஆன்மாவானது எந்த சிருஷ்டி மீது பற்று வைத்திருக்கிறதோ அந்த சிருஷ்டி போலவே இருக்கும். பற்று அதிகரிக்க அதிகரிக்க சிருஷ்டி போல அது மாறும். ஏனென்றால், நேசிக்கிறவன் நேசிக்கப்படும் பொருளைப் போல இருக்க விரும்புகிறான். எனவே ஒரு சிருஷ்டியை நேசிக்கிறவன் சிருஷ்டியின் மட்டத்திற்குத் தன்னைத் தாழ்த்துகிறான். சிருஷ்டியை விட இன்னும் அதிகமாக தன்னைத் தாழ்த்துகிறான். ஏனெனில் சமத்துவத்துடன் அன்பு திருப்தியடைவதில்லை. தன்னை அடிமை ஆக்க ஆசிக்கிறது”. (புனித சிலுவை அருளப்பர்)

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் உலகப் பொருட்கள், இடங்கள், ஆட்கள் மீது மிஞ்சிய பற்று இன்றி வாழும் வரம் தாரும்.